| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 219/2024 |
| நாள் | 26.02.2026 |
| பெயர் | கணேஷ் |
| தந்தை பெயர் | குப்புசாமி |
| சாட்சி எண் | DW2 |
| வயது | 42 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பொறியியல் பட்டம் பெற்றுள்ளேன்.எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் நன்றாக படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் தற்போது சாஃப்ட்வேர் பிராக்ஜட் மேனேஜர் ஆக பணிபுரிகிறேன். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு வா சா ஆ 3 என்னுடைய மூல பத்திரமான 1942 கிரைய பத்திரத்தில் உள்ள நான்கு எல்லைகளையும் படிச்சு பார்த்து விட்டதா கிரையம் வாங்கினேன் என்றால் நான் சம்பந்தப்பட்ட பத்திரங்களை பெற்று எனது வழக்கறிஞரிடம் கொடுத்து அதை சம்பந்தமாக அவரின் கருத்துரை பெற்று அதன் அடிப்படையில் கிரயம் வாங்கினேன். வா.சா.ஆ 11 ராஜசேகர் என்பவரின் ஆவணத்தில் நான்கு எல்லைகள் குறிப்பிடப்படவில்லை என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ 21 நான் கிரயம் பெற்ற 2021 இல் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தில் வடக்கில் தயாளன் மனை தெற்கில் வேலூர் ரோடு

கிழக்கில் மின்சார வாரிய கிடங்கு மேற்கில் வேணுகோபால் தெரு என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு காலகட்டத்தில் ஆற்காடு ரோடு என்று அழைக்கப்பட்ட சாலை தான் தற்போது வேலூர் ரோடு என்று அழைக்கப்படுகிறது என்றால் அதை குறித்து எனக்கு தெரியாது.வாதியின் மூல பத்திரமான வா சா ஆ 2 1936 துரைசாமி முதலியார் ஆவணத்தில் ஆற்காடு ரோடு என்று உள்ளது என்றால் அதில் விவரங்கள் உள்ளது. ஆனால் அதை புரிந்து கொள்ளும் அளவிற்கு எனக்கு விவரங்கள் தெரியாது. எல்லைகளை குறித்த விவரங்கள் எனக்கு சரியாக தெரியாது. வாதியின் முந்தைய ஆவணமான வா.சா.ஆ 4 1946 ஹெச் எம் அப்துல் காதர் கிரைய பத்திரத்தில் சர்வே எண் 13/1 என்று உள்ளது என்றால் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள எழுத்துக்கள் நெருக்கமாக இருப்பதால் அதை என்னால் படிக்க முடியவில்லை. என்னுடைய மூல பத்திரமான வா.சா.ஆ 3 1942 லலிதா பாய் அவர்களின் பத்திரத்தில் சர்வே எண் 13 என்றுதான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 3 ஆவணத்தில் சொத்து விவரத்தில் ஆற்காடு ரோடு என்றோ அல்லது வேலூர் ரோடு என்றோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் 2001 ஆம் ஆண்டு கிரயம் வாங்குவதற்கு முன்பு முதலாம் பிரதிவாதி ராஜசேகர் அசல் வழக்கு எண் 221/2012 என்று வழக்கையும் வாதி கோதை அசல் வழக்கு எண் 211/2014 என்ற வழக்கையும் காஞ்சிபுரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 6.1.2020 ஆம் ஆண்டு தேதியில் முதலாம் பிரதிவாதி ராஜசேகர் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 221/2012 அவர் வழக்கை நடத்தாததால் அது தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதலாம் பிரதிவாதி ராஜசேகர் என்பவர் வழக்கு சம்பந்தப்பட்ட

விவரங்களை மறைத்து என்னிடம் சொத்தை விற்பனை செய்து உள்ளார் என்றால் வழக்கை பற்றி அவர் என்னிடம் சொல்லவில்லை. WP.No 4338/2022 dated – 29.07.2024 தேதியிட்ட உயர் நீதிமன்ற உத்தரவில் பத்தி 12ல் வழக்கு சொத்தின் காலிமனையில் சுற்று சுவர் உள்ளதாகவும் கட்டிடங்கள் எதுவும் இல்லை என்றும், நான் கட்டிடம் எதுவும் கட்டினால் என்னுடைய வழக்கு எண் 135/2021 தள்ளுபடி செய்யப்பட்டால் அந்த கட்டிடத்திற்கு உரிமை கோர முடியாது என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். இந்த உத்தரவு நன்றாக தெரிந்து இந்த இடத்தில் நான் கட்டிடம் கட்டினேன் என்றால் நாங்கள் கட்டிடம் எதுவும் கட்டவில்லை ஹீண்டாய் சீட் (Hundai Sheet) போட்டுள்ளேன். இந்த நீதிமன்றத்தால் இடைக்கால மனு எண் 2/2024 24.10.2024 ஆம் தேதி நீதிமன்ற ஆணையரை நியமித்தையும் மற்றும் அவரின் அறிக்கையையும் எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மன எண் 538/2025 என்ற மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த சீராய்வு மனுவில் 06.03.2025 தேதி அதே நீதிமன்ற ஆணையரை தாலுகா சர்வேயர் மூலம் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான்.26.04.2025 அன்று ஆணையர் ஆய்வு செய்யும்போது நானும் இருந்தேன் என்றால் சரிதான். வா சா ஆ 33 என்பது 10.03.2003 தேதியிட்ட டவுன் சர்வே ஃபீல்டு ரிஜிஸ்டர் என்றும் அதில் டவுன் சர்வே எண் 17 மற்றும் 18 வாதியின் விற்பனைதாரரான ஹச் எம் அப்துல் காதர் மகன் இப்ராஹிம் பெயர் உள்ளது என்றால் சரிதான். ஆனால் அவர் எச் எம் அப்துல் காதரின் மகனா இல்லையா என்பது எனக்கு தெரியாது. 2003 ஆம் ஆண்டுநெட்டேரி கிராமம் டவுன் சர்வே ஃபில்டிற்க்கு மாற்றப்பட்டு விட்டது என்றால் எந்த ஆண்டு மாறியது என்னவாக மாறியது என்று

விவரம் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ 9 வாதி கோதையின் 2005ஆம் ஆண்டு கிரையமானது மொத்தம் பத்து நபர்களால் கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் கையெழுத்துக்கள் உள்ளது. யாருடைய கையெழுத்து என்று எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ 9 ல் ஏழாவது நபராக கையொப்பம் செய்தவர் எச்.எம் அபுல் காதர் குமாரர் என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளது ஆனால் அவர்தான் வாரிசுதாரர் என்று எனக்கு தெரியாது. முதலாவது பிரதிவாதியின் விற்பனைதாரரான லலிதாபாயின் பெயரில் உள்ள பட்டாவோ அல்லது டவுன் சர்வே ஃபீல்டு ரிஜிஸ்டர் இந் நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும். என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்த ஆவணங்களில் லலிதா பாய் அவர்களின் பெயரில் உள்ள பட்டாவோ அல்லது டவுன் சர்வே ஃபீல்டு ரிஜிஸ்டர் உள்ளதா என்றால் அதை தற்போது பார்க்க என்னால் சொல்ல இயலவில்லை. நான் அவ்வாறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. வா.சா.ஆ 31 நெட்டேரி கிராமத்தின் பழைய சர்வே எண் 13 ற் கான எஃப் எம் பி வரைபடம் என்றால் வரைபடம் போல் உள்ளது ஆனால் அது அசல் ஆவணம் அல்ல. வா சா ஆ 3ல லலிதாபாய் அவர்களின் கிரைய பத்திரத்தில் ஒரு எல்லையாக சர்வே எண் 1516 ற்கு கிழக்காக சர்வே எண் 13 உள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சர்வே எண்கள் குறிப்பிட்டுள்ளது ஆனால் அவை எல்லை விவரமா என்று எனக்கு தெரியவில்லை.

**வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

(Sd/- Deepthi Arivunithi, M.L.,)
Principal District Judge,
Kancheepuram.